சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **215 / 2022**

பெயர்: கீதா வா.சா. 1 தேதி **04.07.2025**

குறுக்கு விசாரணை

தங்கம்மாள் என்பவர் ஆறுமுக வெட்டியான் என்பவரிடம் இருந்து தான் சொத்தை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். தங்கம்மாளின் கணவர் பெயர் குழந்தைவேல். மேற்படி தங்கம்மாள் மற்றும் குழந்தைவேலுக்கு முருகன், மாணிக்கம், பழனியாண்டி ஆகிய மூன்று ஆண் குழந்தை மற்றும் பாப்பாத்தி என்ற பழனியம்மாள் ஆகியோர்கள் வாரிசுகள். மேற்படி பாப்பாத்தி என்ற பழனியம்மாள் என்பவரின் மகள் தான் நான். நான் என்னுடைய அம்மாவின் சகோதரரின் மகனை நான் திருமணம் செய்துள்ளேன். முதல் விசாரணையில் சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது. நான் மேலே சொன்ன சங்கதிகளை முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் வழக்கு சொத்தின் சர்வே எண்ணை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சர்வே எண்ணை கூறவில்லை என்றால் சரியல்ல. நான் என்னுடைய மாமனாரிடம் இருந்து சொத்தினை கிரையம் வாங்கியுள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. தங்கம்மாளுக்கு மொத்த 1 1/2 ஏக்கர் பூமி இருந்தது. மேற்படி தங்கம்மாளின் குழந்தைகள் முருகன், மாணிக்கம், பழனியாண்டி ஆகிய மூன்று வாரிசுதாரர்களும் மூன்று சமபாகங்களாக பிரித்துக்கொண்டார்கள் என்றால் ஆமாம். (பின்னர் சாட்சி இல்லை என்று கூறுகிறார்).

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளிற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/-(ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.